# கவிஞர் வைரமுத்துவின் திருத்தி எழுதிய தீர்ப்புகள் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

*முனைவர் செ. சக்திமுருகன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7898

***முன்னுரை***

*புதுக் கவிதையிலக்கியத்தை எண்ணற்றவர்கள் படைத்தாலும் தன் ஆளுமைத் திறத்தால் தனக்கென்று தனியிடத்தை இன்றளவும் தக்க வைத்துக் கொண்டவர் கவிஞர் வைரமுத்து. அவர் எழுதிய "திருத்தி எழுதிய தீர்ப்புக்கள்" கவிதை நூலிருந்து அவருணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## பெண்ணினமும் பெண்மையும்

உயிரினங்களில் ஒன்றான மனித இனம் ஆண், பெண் இரு பிரிவுகளுள் அடங்கும். ஆண் இனத்தை வீரத்திற்கு இலக்கணமாகவும், பெண்ணினத்தைப் பொறுமைக்கு இலக்கணமாகவும் கற்றறிந்த சான்றோர்கள் கூறுவார்கள். பொறுமைக்கு இலக்கணமாகக் கருதப்படும் பெண்ணினத்தைப் போற்றிப் புகழ்ந்தும், வர்ணனை செய்தும், பாடல்களிலும், கவிதைகளிலும், புலவர்களும், கவிஞர்களும் புகழ்ந்து கூறியுள்ளனர். அந்தளவிற்குப் பெண்ணினம் பெருமைக்குரிய இனமாக உள்ளது. மனிதர்களிடம் பெருமைக்குரிய இனமாகக் கருதப்படும் பெண்ணினம் நான்குவகை குணங்களுக்கு உரியவர்கள் என்பதை தொல்காப்பியம்,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்தல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"**

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றது.

குடும்ப வாழ்க்கையில் அகப்பட்டுக் கொண்ட பெண்ணினம் திக்குத்தெரியாத காட்டில் தவிப்பது போன்ற நிலைக்குட்படுகின்றனர். வெளியுலக வாழ்க்கை என்னவென்று அறியாமல் குடும்பம் என்ற அகவுலகில் அகப்பட்டுக்கொண்டு கணவன், குழந்தை, மாமனார், மாமியார் என்ற உறவே பெரிதெனக்கருதி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயந்திரமாக பெண்ணினம் காணப்படுகிறது. ஒவ்வொரு நாளும் மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயந்திரமாகக் காணப்படும் பெண்ணினம் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய மறந்துவிடுகின்றனர். பிறருடைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் பெண்ணினம் கட்டிலறைக்கும், சமையலறைக்கும், ஓடியலைந்து உருக்குலைந்து போன இனம் என்பதை,

***"பாவம் மனைவி,***
***இந்த இல்லறக் கிரிக்கெட்டில்***
***கட்டிலறைக்கும்***
***சமையலறைக்கும்***
***ரன்கள் எடுத்தெடுத்தே***
***ரணமாய்ப்போனாள்"***

என்ற கவிதைவரிகள் எடுத்துக் கூறுகின்றன.

**வரதட்சணைக் கொடுமைகள்**

சமூகத்தில் வாழும் தாய், தந்தை, உற்றார், உறவினர் போன்றவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஆணையும் பெண்ணையும் இல்லற வாழ்வில் ஈடுபடுத்தும் புனிதமான உறவுக்குத் திருமணம் என்று பெயராகும். இதற்கு நேர்மாறாக ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தாய் தந்தை உற்றார் உறவினர் என்று எவரையும் நாடாமல் தாங்களாகவே இணைந்து இல்லறம் நடத்துகிறோம் என்று கூறினால் சமூகத்தினரால் அது காதல் திருமணம் என அமையும். எனவே திருமணம் என்பது ஒரு புனிதமான உறவு என்பதற்கு இதுவே சான்றாக இருக்கும்.

சீதனம் அல்லது வரதட்சணை கொடுக்காமல் திருமணம் என்பது முயலுக்கு கொம்பு முளைப்பது போன்ற கதையாகும். அதற்கு இச்சமூகம் தலையசைத்து வளர்த்துக் கொண்டும் வளர்ந்து கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டும் இருக்கும். சீதனம் அல்லது வரதட்சணைக் கொடுமையால் பெண்ணினம் துன்பப்படுவதை நினைத்துப் பார்த்து அவர்களின் வரலாற்றில் புதிய பாதை அமைக்கப்பட வேண்டும் என்பதை கவிஞர்

***"இனியேனும்***
***மாதர்களின் வரலாற்றை***
***மறுபார்வை செய்யுங்கள்"***

எனப் பாடியுள்ளார்..

**விதவைக் கொடுமை**

சமூகத்தில் ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இணைந்து திருமணம் செய்து கொண்டு வாழ்வதற்கு இல்லறம் அல்லது குடும்பம் என்றழைக்கப்படும். ஆணுடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் பெண்ணினம் பல்வேறு வகையான கடமைகளைப் பெற்று பொறுப்புடன் நடந்து கொள்ளும் இனமாகும். இத்தகைய பெண்ணினம் கணவனை இழந்த பின்பு மொட்டையடித்து வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு உப்பிட்ட உணவோ வண்ணப்புடவையோ தராமல் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விடாமல் சமூகத்தில் ஒதுக்கி வைத்து கூட்டுப்புழுவாய் இல்லத்தில் அடைக்கப்பட்டிருப்பதை,

***"ஏனிந்த எதிர்ப்பரிணாமம்?***
***பெண்ணினத்து வரலாற்றில்***
***பட்டுப்பூச்சிகள், ஏன்***
***கூட்டுப்புழுக்களாய்க்***
***குறுகிப் போகின்றன"***

என்ற கவிதை வரிகள் மூலம் கவிஞர் உணர்த்துகிறார்.

கணவனை இழந்த பெண்ணினத்திற்குச் சமூகம் செய்யும் மிகப்பெரிய கொடுமைகளிலிருந்து விடுபட வேண்டுமெனில் நெருப்புக் கனலில் குளித்துக் கரையேறவேண்டும் என்பதை,

***"ஒரு***
***கனவில் குளித்துக்***
***கரையேறினால்தான்***
***அழுக்கின் அணுக்கள்***
***அதில் கரையும்"***

என்ற கவிதைவரிகளால் அறியமுடிகின்றது. கைம்மைப் பெண்ணினம் சமூகத்தினருக்குப் பயந்து உள்ளத்திலுள்ள துயரத்தினையும் இன்பத்தினையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தங்களுக்குள் அடக்கிக் கொண்டு வாழ்கின்றனர். ஒவ்வொரு நாளும் உள்ளத்தில் அழுது கொண்டிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்தார், என்னை மணந்தார் இறந்தார் இறந்தவுடன் அனைத்து சுகங்களும் பறிக்கப்பட்டன என்பதை ஒவ்வொரு நாள் இரவிலும் அப்பெண்ணினம் அழுது கொண்டிருக்கும். அப்பெண்ணினத்தின் கண்களிலிருந்து விழும் கண்ணீர்த்துளிகளை மட்டும் சமூகத்தினர் பறித்துக் கொள்ளாமல் விட்டுவிட்டனர் என்பதை,

***"சமூகம்***
***ஒரு விதவைக் கூந்தலின்***
***பூக்களை மட்டுமே***
***புறக்கணிக்க முடியும்***
***அவள் கண்களிலிருந்து***
***இதயத்திற்குள் சொட்டும்***
***கண்ணீருக்கு யார்***
***காவல் நிற்க முடியும்"***

என்ற கவிதைவரிகள் உணர்த்துகின்றன.

சமூகத்திலுள்ளோர் இனிமேலும் கணவனை இழந்த பெண்ணினத்திற்கு விதவை என்றும் கைம்பெண்டிர்என்றும்கூறிவருமேயானால் தன்முகத்திற்கு தானே உமிழ் நீரை துப்பிக் கொண்டது போலாகிவிடும். சமூகமும் அச்சமூகத்திளுள்ளோர் என்றென்றும் நலமாக வாழ்வதற்கு கைம்மைச் சடங்கினை செய்யவேண்டும் என்று நினைத்து இனி மேலும் தொடர்ந்து மேற்கொள்ளுமேயானால் தன்னுடைய உடம்பில் தானே சேற்றினைப் பூசி அழுக்காக்கிக் கொள்கிறது என்பதனை,

***"சமூகம்***
***அவளை சுத்தப்படுத்துவதாய்***
***தன்னை அழுக்குப் படுத்திக் கொள்கிறது"***

என்ற கவிதைவரிகள் சமூகம் தன்னை அழுக்குப் படிந்து கறையாக்கிக் கொள்வதை எடுத்துரைக்கின்றது. கணவனை இழந்த பெண்ணினத்திற்கு மறுமணம் செய்து அழகுபார்க்க வேண்டும். அதற்கு சமூகத்தில் ஒருவகையான புரட்சி தோன்றவேண்டும். புரட்சியின் மூலமாகவே கணவனை இழந்த பெண்ணினத்திற்கு மறுவாழ்வினைக் கொடுக்க முடியும்.

## முடிவுரை

பெண்ணிகள் சந்திக்கும் வரதட்சணைக் கொடுமைகள், கணவனை இழந்த பெண்ணினத்திற்கு அளிக்கப்படும் தேவையற்ற செயல்முறைகள், அதனால் அவர்கள் அடையும் பல்வேறு வகையான துன்பங்கள் ஆகியன கூறப்பட்டுள்ளன.

## துணைநூல்கள்


1. கவிஞர் வைரமுத்து திருத்தி எழுதிய தீர்ப்புகள் சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட், சென்னை - 600 024
2. இளம்பூரணர் (உ.ஆ.) தொல்காப்பியம்,
3. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, முதற்பதிப்பு 1967